**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி</u>**

முன்னிலை: திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

(2056 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் கார்த்திகை திங்கள் 26ம் நாள்)
2025ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>E.P.No.5/2021</u>**
**<u>CNR No.TNED13-000295-2021</u>**
**<u>In</u>**
**<u>O.S.No.29/2014</u>**

1. சுப்பணன்
2. பர்வதம்
3. தண்டபாணி
4. பாஸ்கரன் – மனுதாரர்கள்/வாதிகள்

//எதிராக//

1. கொமரப்ப கவுண்டர் (இறந்தவர்)
2. மாலதிதேவி
3. சுகேஷ்
4. தமிழக அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர், ஈரோடு.
5. மாவட்ட வருவாய் கோட்டாட்சியர், ஈரோடு மாவட்டம்.
6. வருவாய் கோட்டாட்சியர், பிரப் ரோடு, ஈரோடு.
7. வட்டாட்சியர் முன்பு ஈரோடு வட்டம், தற்போது
   கொடுமுடி வட்டம், கொடுமுடி.
8. சண்முகம்
9. மோகன்
10. வாசு
11. பொன்னுசாமி
12. மாலதி
13. மதியழகன் – எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.12.12 17:32:34 +0530
PANDIARAJAN

இம்மனு இந்நீதிமன்றத்தில் 25.11.2025ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.சி.முத்துசாமி அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகி எதிர்மனு உரை தாக்கல் செய்தும், 2ம் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், மனுதாரர்கள் தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>உத்தரவு</u>

அசல் வழக்கு எண்.29/2014 வழக்கின் தீர்ப்பாணையின்படி 2, 3 எதிர்மனுதாரர்களின் தாவா "F" அட்டவணை சொத்தில் 1,2,3,6 இனச் சொத்துக்களான பாதை மற்றும் வண்டிப்பாதையை மீட்டமைப்பு செய்து கொடுக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 11(2)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>**;-

மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண்.29/2014 என்ற வழக்கை தாக்கல் செய்து மேற்படி வழக்கில் 31.10.2017ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு மேற்படி தீர்ப்பாணையில் 8வது ஷரத்தில் 2,3 பிரதிவாதிகள் தாவா F அட்டவணை சொத்தில் 1,2,3,6 இனச் சொத்துக்களான பாதை மற்றும் வண்டிப்பாதையை இருந்த நிலைக்கு 3 மாத காலத்திற்குள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏ.எஸ்.நெ.4/2018 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அப்பீல் வாதிகள் ஆஜராகாததால் 29.03.2019ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் கூறியுள்ளார்கள். ஆகவே தீர்ப்பாணையின் 8வது ஷரத்தின்படி 2,3 பிரதிவாதிகள் தாவா F அட்டவணை சொத்தில் 1,2,3,6 இனச் சொத்துக்களான பாதை மற்றும் வண்டிப்பாதையை நீதிமன்றம் நிர்ணயித்த காலக்கெடுவுக்குள் மீட்டமைத்துத்தர அறிவிப்பு அனுப்பியும், நீதிமன்ற உத்தரவுப்படி 2,3


PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.12.12 17:32:51 +0530

எதிர்மனுதாரர்கள் பாதையை மீட்டமைப்பு செய்து கொடுக்க தவறினால் நீதிமன்ற தீர்ப்பாணைப்படி நீதிமன்ற அலுவலர் மூலமாக பாதையை மீட்டமைத்து தர உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 2**ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்மனு உரையின் சுருக்கம்**:-

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது பொய்யானது, வெறுக்கத்தக்கது, சட்ட திட்டத்திற்கு உட்பட்டதல்ல. எதிர்மனுதாரர்கள் சரியென ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை வாதிகளே தகுந்த ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும். அசல் வழக்கில் 31.10.2017 தேதியன்று நிறைவேற்றப்பட்ட ஆணையை நிறைவேற்ற மனுதாரர்கள் விண்ணப்பத்தை தாக்கல் செய்யாமல் உண்மைகளை மறைத்து பிரதிவாதிகளை வற்புறுத்துவதற்காகவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். 31.10.2017 தேதியிட்ட ஆணை மற்றும் தீர்ப்பை எதிர்த்து, 1 மற்றும் 2 பிரதிவாதிகள் A.S.4/2018 இல் மேல்முறையீடு செய்தனர். மேற்படி மனுவில் 3வது பிரதிவாதி வெளிநாட்டில் இருந்ததால், அவர் மேல்முறையீட்டில் 5வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டார். இதற்கிடையில் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் I.A.No.2/2020 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டது. 5வது பிரதிவாதியை 3வது பிரதிவாதியாக மாற்ற கோரி மனு தாக்கல் செய்து அது I.A.No.3/2021 என்ற எண்ணில் நிலுவையில் இருந்து வருகிறது. மேற்கண்ட சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, பிரதிவாதிகள் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவுக்காகக் காத்திருக்கிறார்கள். மனுதாரர்கள் அனைத்து சம்பவங்களையும் வேண்டுமென்றே மறைத்து, இந்நீதிமன்ற உத்தரவின்படி பிரதிவாதிகள் மீட்டமைப்பு செய்து தவறிவிட்டதாக பொய்யாக கூறி வருகின்றனர். மேல்முறையீடு இன்னும் முடிவடையாமல் உள்ளதால் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் இல்லை. ஆகவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளார்கள்.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.12.12 17:23:04 +0530

3. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி எதிர்மனு உரை தாக்கல் செய்தும், 2ம் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாகததால் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கு எண்.29/2014 வழக்கு தாக்கல் செய்து வழக்கில் 31.10.2017ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை மனுவுடன் தாக்கல் செய்துள்ள தீர்ப்பாணையின் சான்று நகல் மூலம் அறிய முடிகிறது. மேற்படி தீர்ப்பாணையில் 8வது ஷரத்தின்படி 2,3 பிரதிவாதிகள் தாவா F அட்டவணை சொத்தில் 1,2,3,6 இனச் சொத்துக்களான பாதை மற்றும் வண்டிப்பாதையை இருந்த நிலைக்கு 3 மாத காலத்திற்குள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் பேரில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மேல்முறையீடு தாக்கல் செய்து இவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறுத்தி வைக்க தடை ஆணை பெற்றுள்ளதாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வழக்கில் ஆஜராகி அவரது தரப்பு வழக்கை நிரூபிக்கவில்லை. மனுதாரர்கள் மனுவை பரிசீலனை செய்து பார்க்கும்போது எதிர்மனுதாரர்கள் தீர்ப்பாணைக்கு பிறகும் தீர்ப்பாணையின் 8வது ஷரத்தின்படி 2, 3 பிரதிவாதிகள் தாவா F அட்டவணை சொத்தில் 1,2,3,6 இனச் சொத்துக்களான பாதை மற்றும் வண்டிப்பாதையை இருந்த நிலைக்கு 3 மாத காலத்திற்குள் அமைத்துக் கொடுக்கவில்லை என்பதை அறிய முடிகிறது. அசல் வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டவுடன் அதை நிறைவேற்றுவது நீதிமன்றத்தின் கடமை ஆகும். மேலும் தடை உத்தரவு ஏதும் இல்லாததாலும் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்கலாம் என தீர்மானித்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.12.12 17:33:20 +0530

 PANDIARAJAN ***DM CUM JM, KODUMUDI***

**முடிவாக.** மனுதாரர்கள் மனு செலவு தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.12.12 17:33:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

மனுதாரர்கள், 2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை –

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.12.12 17:33:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.